864

Reg. No. M. 2147.

# THE "AGRICULTURIST"

*A monthly Journal devoted to Agriculture and its allied subjects.*

# "கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 MAY 1928
MADRAS

| Vol. XI<br>புத்தகம் XI | விபவ ஹூ வைகாசி மீ 1உ<br>1928-ம் ஹூ மே மீ 14உ | No. 2<br>பிரதி. 2 |
|---|---|---|

Contents

| Contents | Page |
|---|---|
| Facts to be remembered in paddy cultivation | 25 |
| Cotton | 28 |
| Naradarmalai Agricultural & Industrial Exhibition | 32 |
| Review | 35 |
| Coconut | 36 |
| News & Notes | 41 |
| Correspondence | 43 |
| Almanack | 48 |

பொருளடக்கம்

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| நெல் சாகுபடியில் ஞாபகம் வைக்க வேண்டிய விஷயங்கள் | 25 |
| பருத்தி | 28 |
| நாரசர்மலை விவசாய கைத்தொழில் காக்ஷி | 32 |
| புஸ்தக விமர்சனம் | 35 |
| தென்னை | 36 |
| குறிப்புகள் | 41 |
| கடிதம் | 43 |
| பஞ்சாங்கம் | 48 |

**Editor Rao Bahadur J. Chelvaranga Raju**
" Jagannadha Baug " Saidapet.

Annual Subscription Including Postage Rs. one only

Copy Right] [Registered




விவசாயத்தில் இப்போது அடையும் இலாபத்தைவிட அதிக இலாபம் பெற விரும்புகிறீர்களா?

அப்படியானால் இந்தியாவிலேயே, இந்தியர்களாலேயே செய்யப்பட்ட இயந்திர வஸ்துக்களடங்கிய இயற்கை உரங்களை வாங்கி உபயோகியுங்கள்.

நாங்கள் **எலும்பு புத்தூள், ஜவ்வு, கொம்பு சீவல், குளம்பு சீவல், புண்ணாக்கு**கள் முதலிய சகலமான எருக்களையும், அந்தந்த பயிர்களுக்குத் தக்க எருக்களைக் கலந்தும் தயாரித்தும் விற்கிறோம்.

இயற்கை உரங்களைச் சேர்க்காமல் தற்காலம் அதிக அட்டகாசப்படுத்திவிற்கும் செயற்கைஉரங்களாகிய உப்பு உரங்களைத் தனியாய் உபயோகித்தால் கெடுதல் சம்பவிப்பதைப் போலல்லாமல் எங்கள் இயற்கை உரங்களால் எப்போதும் நன்மையே உண்டாவதோடு **நிலவளமும்**, நாளுக்கு நாள், வாரத்திற்கு வாரம் மாசத்திற்கு மாசம், வருஷத்திற்கு வருஷம், அபிவிருத்தியடையும் என்பதில் சந்தேகமேயில்லை.

விலை முதலிய விவரங்களறிய விரும்புவோர்:—

**ஏ. ஜெ. ரோட்ரிக்ஸ் அண்ட் கோ,**

ஏஜண்ட்ஸ் கடம்பூர் எருக்கிடங்கு,

கடம்பூர் (S. I. R.)

என்று எழுதி முழு விவரங்களறியலாம்.

# THE "AGRICULTURIST"

***A monthly Journal devoted to Agriculture and its allied subjects.***

# "கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

| Voi. XI<br>புத்தகம். XI | விபவஸு வைகாசி மீ 1உ<br>1928-ம்வஸு மேமீ 14உ | பிரதி. 2<br>No. 2 |
| --- | --- | --- |


## Facts to be remembered in paddy cultivation

## நெல் சாகுபடியில் ஞாபகம் வைக்கவேண்டிய விஷயங்கள்

அனேக ஜில்லாக்களில் நெல் பயிரிடுவதில் நாற்றங்கால்களில் நாற்றுவிட்டு அதைப் பிடுங்கி நட்டுப் பயிரிடும் வழக்கம் சாதாரணமாயுள்ளது. நாற்றுப்பாவி நடும் விஷயம் ஜல சௌகரியங்களைப் பொருத்திருக்கும். ஒரு இடத்தில் சாதாரணமாய் குறித்த மாதங்களில் ஜலம் வராவிட்டால் அங்கு கிருஷிகர் வயல்களில் நாற்று விட்டிருந்தபோதிலும் தக்கவயதில் நாத்துபிடுங்கி நடாமல் கஷ்டப்படுவதுண்டு. இக்காரணத்தை யனுசரித்து கிருஷிகர் முன் பின்னைப் நாற்றங்கால்களில் நாற்றுப் பாவினால் சற்று விதை நஷ்டமானாலும் ஜலம் வரும்போது தக்க வயசாயிருக்கும் நாற்றுகளை பிடுங்கிநட சௌகரியப்படும். பெருத்த சம்சாரிகளே இதை அநுசரிக்கக் கூடும். எழியகுடியானவரும் சில்லரை சமுசாரிகளும் தாங்கள் விட்ட நாத்தங்கால்களில் நாற்றுகள் முற்றிவிட்டால் அதைநடாமல் வேறு இடங்களுக்குப்போய் சரியான நாற்றுகளை விலைக்குவாங்கி நட்டு வருகிறார்கள். அப்படி அக்கம் பக்கங்களில் வாங்கியும் தொலை தூரங்களிலிருந்து வாங்கிக் கொண்டுவரும்நாற்றுகளை நாத்தங்கால்களிலிருந்து அப்புறப்படுத்தின தினமே நடசாத்தியப்படாமல் அனேகநாட்களுக்குப்பின் நடுவதுண்டு. சாதாரணமாய் 10-முதல் 15-நாட்கள்வரை நாற்றங்கால்களிலிருந்து அப்புறப்படுத்திய நாற்றுகள் சிலர் நடுகிறார்கள். அதுவுமன்றி சில இடங்களில் எல்லோரும் ஏககாலத்தில் தண்ணீர் காலில்வந்தவுடன்

நடவு நடப்பிரயத்தனங்கள் செய்ய வேண்டிய திருப்பதாலும் வேலை செய்ய ஆங்காங்கு ஆகப்படும் கூலியாட்களுக்குத் தக்கபடியும், நாற்றுப் பிடுங்கித் தயாராயிருந்தாலும் உடனே நட வசதிப்படாமல் சில நாட்களுக்கு நடுவை தாமத மடைவது நமது அனுபோகத்தில் எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. ஆகையால் நாத்தங்காலிலிருந்து தக்கவயதில் பிடுங்கிய நாத்துகளும் அங்கங்கே கிடைக்கக்கூடிய வசதிகளாகிய நடவு ஆள் கிடைத்தல், உழவுமுதலிய பருவங்கள் செய்ய அனுகூலமாய்க் கிடைக்கும் சாதனங்கள், நாற்றைக் கொண்டுவர வேண்டிய தூரம் முதலியவைகளைப் போலொத்த விஷயங்களைப் பொருக்கும். இப்படி நாற்றங்காலிலிருந்து பிடுங்கிய நாத்துக்கள் உடனே நட்டுப் பயிரான பயிர்களுக்கும், தாமதித்து சில நாட்களுக்குப்பின் சாகுபடி செய்தபயிர்வளர்ச்சிக்கும் அவைகளிலிருந்து கிடைக்கும்மாசூலுக்கும் வித்தியாசமுண்டா இல்லையாவென்றும் அனேகர் கேழ்வி கேட்டும் அதற்கு அனேகர் வித்தியாச முண்டென்றும் சிலர்யாதொரு வித்தியாசமு மில்லை யென்றும் சொல்லுகிறதை நாம் பலதடவைகளில் கேட்டிருக்கிறோம். சிலர் கார் பயிரை உடனே நட வேண்டுமென்றும் அப்படிக்கில்லையானால் கெட்டுப் போகுமென்றும், மற்றும் சிலர் பிசானம் போலொத்தபயிர்களை எத்தனை நாட்கள் பொருத்து நட்டாலும் கெடாதென்றும் சொல்வதுண்டு. இதுடன் போகாமல் சிலர் களர் சம்மந்தமான நிலங்களில் உடனே நடாவிட்டால் பயிர் வாய்க்கிறதில்லை யென்றும், காய்ச்சலும் பாய்ச்சலு முள்ள இடங்களில் எத்தனை நாட்கள் பொருத்து நாத்துகளை நட்டாலும் கெடுவதில்லை யென்றும் கழிக்கால் நிலங்களில் உடனே நடவேண்டுமென்றும் இப்படிப் பலர் பலவாராய் அபிப்பிராயப்படுவதுண்டு. இதுகளில் எது வாஸ்தவமென்று சாஸ்திரரீதியாய் ஆராய்ச்சிகள் செய்தாலொழிய திட்டமாய் யார் சொல்வது சரிதானென்று ஒருவராலும் சொல்லமுடியாது.

இவ்விஷயத்தில் ஆராய்ச்சிகள் செய்ய வேண்டுமென்று ஆடுதுரை நெல் அபிவிருத்தி பண்ணையில் வேலை செய்யும் நிபுணருடைய அசிஸ்டண்டு ஸ்ரீமான் கே. வெங்கடராமன் 1926ம் வருஷத்தில் சில ஆராய்ச்சிகள் செய்யத் துடங்கி அதன் விவரங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆடுதுரை பண்ணையில் பொருக்கி எடுத்த வெள்ளை சிருமணி பன் தினுசுக்கு ஆடுதுரை நீர் 2 என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்த தினுசை 1926ல் ஆடுதுரை பண்ணையில் நவீன முறைப்படி நாத்து

விட்டு அந்த நாற்றங்காலிலிருந்து 13—9—26ல் நாற்றுகளை அப்புறப்படுத்தி நாற்றங்காலின் ஒரு பாகத்தில் எல்லாம் வைக்கப்பட்டன. அந்த நாற்றில் கொஞ்சம் நாற்று பிடுங்கிய நாளிலேயே ஒரு இடத்தில் நட்டும், மீந்த நாத்துகளை அடுத்த 5 நாட்களிலும் வெவ்வேறு இடங்களில் ஒரே வயலில் நட்டுப் பரீட்சை செய்தார். பரீட்சை செய்ததில் ஒரே வயலின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறு நாட்களில் நாற்றுகளை நட்டு பரீட்சை செய்யப்பட்டது. ஏனென்றால் வெவ்வேறு பாகங்களிலிருந்து ஒரே மாதிரிகட்ட நடுகையிலிருந்து கிடைத்த மாசூலின் சராசரி கணக்கை எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால் ஜாஸ்தி வித்தியாசம் பரீட்சை செய்ததில் ஏற்படமாட்டாதென்ற எண்ணத்துடன் தான். இப்பரீட்சையில் வைத்திருந்த குறிப்புகளிலிருந்து என்ன வெளிப்படுகிறதென்றால்:—

(1) பிடுங்கி நட்ட நாற்றுகள் வேரூன்றி நிமிர்வதில் நாற்று பிடுங்கின உடன் நட்ட நாற்றுக்கும் அதற்குப்பின் இரண்டு நாள் பொறுத்து நட்ட பயிருக்கும் வித்தியாசம் ஜாஸ்தியில்லை யென்றும், 4-வது 5-வது 6-வது நாட்களில் நட்ட நாத்துகள் 100க்கு 85 முதல் 90 வரை தான் வேரூன்றி கூன் நிமர்ந்தது என்றும் தெரிய வந்தது.

(2) வேரூன்றி கூன் நிமர்ந்த பின் பயிர் வளர்ச்சியிலும் பக்கச் சிம்புகள் வெடித்து கிளைத்துப்பயிராவதிலும், நாற்றங்காலிலிருந்து அப்புறப்படுத்தின உடன்நட்ட நாற்றுக்கும் அடுத்த நாட்களில நட்ட நாத்துகளின் பயிருக்கும் யாதொரு வித்தியாசமும் காணப்படவில்லையென்றும் தெரிந்தது. ஆகவே பயிர்கள் வேரூன்றி முளைக்க ஆரம்பித்து விட்டால் அது கிளைத்து முடு கட்டி வளர்வதில் யாதொரு வித்தியாசமும் உண்டாகிறதில்லை.

(3) பயிர் பூத்து ஈன்றும் குணத்தில் வித்தியாசங்கள் ஏற்படுகிறதாவென்று கவனமாய்ப் பார்த்தபோது நாற்றங்காலிலிருந்து நாற்று பரித்து அன்றே நட்டபயிருக்கும் அப்பால் 5 நாட்கள் வரை நட்டபயிருக்கும் யாதொரு வித்தியாசமும் காணப்படவில்லை யென்றும் புலப்பட்டது. ஆனால் 6 நாள் கழித்து நட்ட பயிரில் சற்று வித்தியாசம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. அதுவும் ஜாஸ்தியாகவில்லை.

(4) அப்பால் தானியம் முற்றி அருவடை செய்து பார்த்ததிலும் சாதாரணமாய் வித்தியாசங்கள் ஒன்றும் ஏற்படவில்லையென்றும் தெரிந்து கொள்ளப்பட்டது. மேல் கண்ட பரீட்சையிலிருந்து நாம் தெரிந்து கொண்டது என்னவென்றால் சம்பா திஙுசு நெல் நாற்று கா

நாற்றங்காலிலிருந்து தக்க வயதில் அப்புறப்படுத்திய பின் மூன்று நாள்களுக்குள் வயலில் நட்டுவிட வேண்டுமென்றும், அப்படிச் செய்யாமல் 6 நாள் வரை தாமதித்தால் 3 நாள்களுக்கு மேல் சென்று நட்ட நாற்றுகள் வேர் ஊன்றி கூன் நிமிர்ந்து பயிராவதில் சற்று பாடுவாசியாகிற தென்றும் அந்தப் பாடுவாசியின் காரணத்தால் வயலில் பயிர் அடர்த்தி சற்று கம்மியாகி அதனால் பாடுவாசியான பயிரிலிருந்து மாசூல் கிடைப்பது கம்மியாகுமென்றும் ஆகையால் நாத்தாங்கால்களிலிருந்து பிடுங்கின 3 நாள்களுக்குள் வயலில் நடுவதே சிலாக்கியமான முறை என்றும் தெரிந்து கொண்டோம்.

ஆகையால் நமது சந்தா நேயர்கள் இவ்வியாசத்தின் முதல் பாராவில் சொன்ன சந்தர்ப்பங்கள் நேரிடும்போது நாற்றங்காலிலிருந்து நாற்றுப்பரித்த 3 நாட்களுக்குள் வயலில் நட்டு தக்க பலனடைவார்களென்று நம்புகிறோம்.

---

## COTTON.

## Work done by the Agricultural Department during 1926-27

(continued from page 8 of No. 1 of Vol XI.)

## பருத்தி

## 1926-27ம் வருஷங்களில் விவசாய டிபார்ட்மெண்டார் செய்த வேலையின் சாராம்சம்.

(11ம் வால்யம் 1ம் நம்பர் 8ம் பக்கத் தொடர்ச்சி.)

1926-27-ம் வருஷத்தில் இவ்விராஜதானியில் இருபத்தி மூன்று லக்ஷத்து முப்பதினாயிரத்து நூறு ஏக்கர்கள் பருத்திப்பயிர் சாகுபடியானதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. பருத்தி இவ்விராஜதானியில் ஒரு முக்கிய வியாபாரப் பயிராகையாலும் ஜாஸ்தி விஸ்தீரணத்தில் சாகுபடி யாகிறதாலும், விவசாய டிபார்ட்டுமெண்டார் நெல் பயிர் அபிவிருத்தி செய்ய எண்ணங்கொண்டிருப்பது போல் இப்பருத்திப் பயிரிலும் நல்லதினுசுகளைப் பொறுக்கி எடுத்தோ அல்லது இரண்டு நல்ல தினுசுகளை இணைத்து அதனால் ஒரு நூதனதினுசு உண்டாக்கியோ, அதிலிருந்து கிடைக்கும் நல்ல தினுசை உற்பத்தி செய்து அபிவிருத்தி செய்ய எண்ணங் கொண்டு வேலை செய்கிறார்கள். இவ்வேலை முக்கியமாய் கோயம்புத்தூரில் ஸ்தாபித்திருக்கும் பருத்தி அபிவிருத்தி பண்ணையில் செய்து வரப்படுகிறது. ஆனால் கோயம்புத்

தூரில் பொறுக்கி எடுத்துப்பயிரிட்டு லாபம் அடைந்த நல்லதினுசுகளை வெளிஜில்லாக்களிலிருக்கும் பண்ணைகளாகிய திருநெல்வேலிஜில்லாவில் கோவில்பட்டியிலும், பெல்லாரி ஜில்லாவில் ஹகரியிலும், கர்நூல் ஜில்லாவில் நந்தியாலிலும், குண்டூர் ஜில்லாவில் குண்டூரிலும் ஸ்தாபிதம் செய்திருக்கும் விவசாயப் பண்ணைகளிலும் மறுபடியும் பரீக்ஷை செய்யப்பட்டு அந்தந்த பிராந்தியங்களிலுள்ள விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடுமாவென்று பரீக்ஷை செய்யப்பட்டு வருகிறது. நெல்பயிர் அபிவிருத்திக்குகிளைப்பண்ணைகள் ஆங்காங்கு ஸ்தாபிக்கவேண்டிய அவசியம் நேரிட்டதைப்போல் இப்பருத்திக்குங் கிளைப்பண்ணைகள் ஆங்காங்கு ஏற்படுத்த அவசியம் நேரிட்டதின்பேரில் இதுவரை வேறு பரீக்ஷைகளுக்காக ஸ்தாபனம் செய்திருந்த கோவில்பட்டி பண்ணையை நாளது வருஷம் முதல்கொண்டு பருத்தி பரீக்ஷைக்கென்றே எடுத்துக் கொண்டார்கள். ஆகவே இது ஒரு பருத்தி கிளைப்பண்ணை ஆகிவிட்டது. இப் பண்ணையில் நூதன பருத்தி தினுசுகளைப் பயிரிட்டுப் பார்ப்பதுடன் பருத்திப் பயிர் எவ்விதம் சாகுபடி செய்ய வேண்டுமென்ற விஷயத்தையும், அப்பயிர் அபிவிருத்திக்கு என்னென்ன எருக்கள் தேவை என்ற விஷயத்தையும் நாளாவட்டத்தில் பரீக்ஷிக்கப்படும். பருத்தி தற்காலம் ஜாஸ்தியாய் விளைவிக்கும் ஜில்லாக்களிலும் இம் மாதிரியே பரீக்ஷைகள் செய்ய டிபார்ட்மெண்டார் ஆலோசனைகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மேற் சொன்ன விவசாயப் பண்ணைகளிலிருக்கும் மண் இயல்பு முதலிய சாதனங்கள் இப்பரீக்ஷைகள் சரியானபடி நடத்துவதற்குப் பொருத்தமில்லாமலிருப்பதாக நிபுணர்கள் அபிப்பிராயப்படுவதால் சமீபத்தில் ஒரு பருத்திக் கிளைப்பண்ணை வேறொரு இடத்தில் ஸ்தாபனம் செய்ய வேண்டியது அவசியம் என்று எண்ணியிருக்கிறார்கள்.

இவ்வருஷம் எல்லா தினுசு பருத்திகளின் விலை சற்று இறங்கிவிட்டது. ஏனெனில் அமெரிக்காவில் ஜாஸ்தி பருத்தி உற்பத்தியான காரணத்தால். இந்திய பருத்தியின் இழையின் நீளம் அரை அங்குலம் முதல் $1\frac{1}{8}$ அங்குலம் வரைதான். முக்கால் அங்குலம் முதற்கொண்டு முக்காலேஅரைக்கால் அங்குலஇழை நீளமுள்ள பருத்தி தினுசுதான், இந்தியா முதலிய கீழ் நாடுகளிலுள்ள இடங்களில் சிலாக்கியமாய் கோரப்படுகிறது. இப்பேர்ப்பட்ட இழையுள்ள பருத்தி இங்கிலாந்து தேசத்தில் லிவர்பூல் மார்க்கெட்டில் குறுகிய இழையுள்ளதென்று கருதப்படும். அமெரிக்காவில் பருத்தியின் விளைவு எந்தெந்த வரு

த்தில் ஆஸ்த்ரேலியா ஆப்ரிகா ஈஜிப்ட் தேசத்திலுள்ள முக்காலங்குல நீளமுள்ள பருத்திகள் அந்த தேவைக்காக அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது 1915-முதல் 1918ம் வருஷம் வரை இந்தியாவில் 40லக்ஷம் பேல் உற்பத்தியில் 11-லக்ஷம் பேல்தான் மேல் சொன்ன அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாக லாயக்காயிருந்தது. ஆனால் தற்காலத்திலோ 20-லக்ஷத்திற்கு மேல் அப்பேர்ப்பட்ட பருத்தி இந்தியாவில் விளைவிக்க இடமிருக்கிறது. இதில் சென்னையில் சாகுபடியான இப்பேர்ப்பட்ட தினுசு பருத்தியை 1926ம் வருஷத்து கணக்குடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டுலக்ஷம் ஏக்கரில் நீளமான இழை கொடுக்கக் கூடிய பயிர் விளைவு செய்யப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் சிலவருஷங்களுக்கு முன் கலப்பு உப்பம் தினுசுப்பருத்திகள் பயிரிட்டுக்கொண்டிருந்த இடங்களிலெல்லாம் தற்காலத்தில் பொருக்கியெடுத்தத் தனிக் கருங்கண்ணி தினுசு பயிரிடப்பட்டு வருகிறது. இதிலிருந்து தற்காலம் ஏறக்குறைய நாற்பதாயிரம் பேல் பருத்தி உற்பத்தியாகிறது. இவ்விராஜதானியில் ஏறக்குறைய நான்கு லக்ஷத்து பதினாயிரம் ஏக்கருக்குமேல் கம்போடியா பருத்தி கிணற்றிறவையில் சாகுபடியாகிறது. ஆகையால் ஜாஸ்தி விளைச்சலும் இழை சற்று நீளமுமுள்ள பருத்தி ஜாஸ்தி உற்பத்தியாகக் காரணமிருக்கிறது. கம்போடியா பருத்தியில் பொருக்கியெடுத்த தினுசுகள் நாலில் இரண்டு அதாவது நீர் 295ம் நீர் 15ம் 38ம் நீர் பாவுநூலுக்கு லாயக்காய் இழைகொடுக்கக் கூடிய தினுசுகள். 606ம் நம்பர் 36ம் நீர் பாவுநூலுக்கு லாயக்கானது. 440ம் நீர் 24ம் நீர் பாவுநூலுக்கு லாயக்கானது. இந்த நாலு தினுசுகளும் சிறிது காலமாய் ரயத்துகளால் பயிரிடப்பட்டு சாதாரண தினுசுகளைவிட சிலாக்கியமான மகசூல்கள் கொடுத்திருக்கிறது. கிருஷிகர் இந்த தினுசுவிதைகளை ஏராளமாய் வாங்குகிறார்கள்.

மழையின் உதவியைக் கொண்டு புஞ்சைக் காடுகளில் பயிரிடப்படும் தினுசு பருத்திகள் இப்போதுதான் ஜாஸ்தி விஸ்தீரணத்தில பயிர் செய்து விதை பொருக்கி பட்டவாடா செய்யும் நிலைமையிலிருக்கிறது.

இந்தியாவிலுள்ள இந்திய மத்திய பருத்திக் கமிட்டியார்கள் சென்னை கவர்ன்மெண்டாரின் பருத்தி அபிவிருத்தியை நாடி அங்கத்துக்கு அனுப்பியிருக்கும் திட்டத்தை ஏற்றுக் கொண்டு 5 வருஷங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் கொடுப்பதாய் ஒத்துக்

கொண்டிருக்கிறார்கள். இந்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர சரியான தேர்ச்சியடைந்த நிபுணர்கள் இன்னும் தெரிந்தெடுக்கப்படவில்லையென்றும் கூடிய சீக்கிரத்தில் பிற இடங்களிலிருந்து கொண்டுவர ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றனவென்றும் அறிகிறோம்.

## நிலக் கடலை

தென் ஆற்காடு ஜில்லாவில் திண்டிவனம் சமீபமாய் பாலாங்குப்பமென்ற இடத்தில் 1925-ம் வருஷம் ஜூன்மாதம் முதற்கொண்டு நிலக்கடலை அபிவிருத்திக்கென்று ஒரு பண்ணை ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இதில் செய்யப்படும் முக்கியவேலை அநேகதினுசு நிலக்கடலை தருவித்து எது சிலாக்யமானதென்று கண்டுபிடிப்பதே. இதுவரை செய்திருக்கும் வேலையிலிருந்து எல்லா நிலக்கடலை தினுசுகளையும் இரண்டு தினுசுகளாகப் பிரித்து, குறுகியகாலத்தில் விளையும் தினுசு நீண்டகாலத்தில் விளையும் தினுசு என்று தீர்மானித்திருக்கிறார்கள். நீண்டகால தினுசுகளெல்லாம் படரும் குணமுடையதென்றும் குறுகியகால தினுசுகளெல்லாம் குத்துக் குத்தாய் வளரும் குணமுடையவைகளென்றும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அநேகவித நீண்டகால வேர்க்கடலை தினுசுகளில் தற்காலம் பயிரிடப்படும் மோரிஸ் மணிலாக் கொட்டை ஒன்றென்றும், அதுமற்ற எல்லா நீண்டகால மணிலாக்கொட்டையைவிட தற்காலத்தில் கேவல ஸ்திதியை யடைந்திருக்கிறதென்றும் தெரிய வருகிறது. ஆகவே கூடிய சீக்கிரத்தில் இத்தினுசுக்குப் பதிலாக வேறு நீண்டகாலத்தினுசு கிருஷிகர் பயிர் செய்ய வேண்டியது அவசியம். குறுகியகால மணிலாக்கொட்டை தினுசுகளில் எது சிலாக்கியமானதென்று திட்டமாய் இன்னும் முடிவுசெய்யப்படவில்லை

இப்பயிர் அபிவிருத்தியில் நோய் தாக்காமை, எக்காலத்தில் வெட்டியெடுப்பது திடம், என்னும் விஷயங்களையும் ஆராய்ச்சிசெய்து கொண்டுவருகிறார்கள். இத்துடன் படரும் குணமுடையதும் ஜாஸ்திமாசூல் கொடுக்கக் கூடியதுமான தினுசை குத்துக் குத்தாய் வளர்ந்து மாசூல் கம்மியாய்க் கொடுக்கக் கூடிய தினுசுடன் இணைத்து அதிலிருந்து உற்பத்தியாகும் விதைகளில் குறுகிய காலத்தில் ஜாஸ்தி மாசூல் கொடுக்கக்கூடிய ஒரு தினுசை உற்பத்தி செய்ய வழிகளும் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

# Naradarmalai Agricultural & Industrial Exhibition

## நாரதர்மலை விவசாய கைத்தொழில் கண்காக்ஷி.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் வருஷா வருஷம் சென்ற சில வருஷங்களாக கண்காக்ஷி நடை பெறுவது நமது வாசகர்களறிந்ததே. இவ்வருஷமும் வழக்கம்போல் நாரதர் மலையில் ஷை காக்ஷி நடந்தது. சமஸ்தானத்து, விவசாய பாரம் மானேஜர் அப்போது பின்வருமாறு உபந்யாசம் செய்தார்.

உலகமுழுதும் மனிதருக்குப் பதிலாக யந்திரங்களைக்கொண்டு வேலைசெய்து வருகிறார்கள். இந்தியாவிலும் மற்ற நாடுகளைப்போல் இம்முறையைக் கைக்கொண்டு வருகிறார்கள். உழுதல், எரு விடுதல், விதைத்தல், களையெடுத்தல், நீர்பாய்ச்சுதல், முதலியன விவசாயத்திற்கு இன்றியமையாத அம்சங்களாகும். உழுதற்றொழிலைப் பற்றிப் பேசுவதற்கு முன்பு ஒரு விசேஷ சமாசாரம் கூறுகிறேன்- Ligut Iron Meston மெஸ்டன் மேலசான இரும்புக் கலப்பையின் விலை ..-8-0 விருந்து 3...8...0 ரூபாயிககு வந்திருககிறது; இக்கலப்பையில் உள்ள கொழுவானது நல்ல தாய்ச்சல் உள்ள உருக்கினால் செய்யப்பட்டிருப்பதால் நீண்ட நாளுக்கு உழைக்கக்கூடியது. அடிக்கடி கொல்லர்களைத்தேடித்திரிய வேண்டாம் வேண்டிய பாகங்களைத் தனியாக வாங்கிக் கொள்ளலாம். தேய்ந்து போனவற்றிற்குப் புதிதாக வாங்கிப் போட்டுக் கொள்ளலாம. நுகத்தடி ஒடிந்தால் மட்டில் தச்சன் வேண்டும்; இதனால் ஏற்படும சௌகரியங்கள் அநேகம்.

ஒருமணி நேரத்தில நம நாட்டுக் கலப்பையினால் எவ்வளவு வேலை செய்யககூடுமோ அதைபபோல் மூன்று பங்கு வேலை இதனால் செயயலாம்; வேலையும அதைவிட நன்றாக இருககிறது. மழை பெய்ந்தவுடனே கலப்பையைத தூககிககொண்டு ரிபேர் செய்வதற்காகத் தச்சர்களைத் தேட வேண்டாம. மெஸடன Meston கலபபை அதோ வைத்திருக்கிறது; உங்களுடைய கலப்பைக்கும் இதற்குமுள்ள வித்தியாசத்தையும் மேன்மையையும் கவனியுஙகள்; புஞ்சை சாகுபடிக்கு லாயக்கான மான்ஸன் கலப்பை போன்ற பெரிய கலப்பைகளையும் வாங்கலாம்.

நிலத்திற்கு உரமிடுதலைப் பற்றிச்சிறிது விரிவாகக் கூறுகிறேன், உரம் பலவகைப்படும். அவையாவன—1 மாட்டுக் கொட்டில் [ஆடு மாடுகளின்] எரு; 2; இலைகுழை சருகு முதலியன 3; புண்ணாக்கு;

மீன், எலும்பு, முதலிய உரங்கள் - இவைதவிர; அம்மோனியம் ஸல்பேட்; ஸோடியம் நைட்ரேட்; பொடாஷியம் நைட்ரேட்; ஸூபர் பாஸ்பேட் of பொடாஷ் முதலிய ரஸாயன எருக்களும், இப்போது உரமாக உபயோகப்படுத்தப் படுகின்றன; சாணம் முதலிய இயற்கையான உரங்கள் நிலத்தின் செழிப்பை யதிகரிக்கச் செய்யும்; மற்ற உப்பு உரங்கள் நிலத்தில் விளைகிற பொருள்களின் நலத்தை விருத்தி செய்யும்: ஆனால் நீடித்திருக்கும் பலனை அவை தருகிறதில்லை; இவைகளை முதல்கூறிய எருக்களுடன் கலந்தே உபயோகிக்க வேண்டும். விதைக்கும் தொழிலுக்கு வரிசையாய் விதைக்கும் கருவிகளை உபயோகப்படுத்துவதால், வரிசையாக விதைக்க உபயோகமாகிறது; பெரிய வயல்களில் சீக்கிரமாக விதைக்கலாம்; மழையில்லாத புஞ்சை நிலங்களுக்கு மிக சௌகரியம்: களை வெட்டுவதற்கும் களை யெடுப்பதற்கும் புழுதியைக் கிளறி விடுவதற்கும் இன்னும் பலகாரியங் களுக்கும் Planet Junior hoe ஜூனியர் ஹோ என்னும் கருவியை உபயோகிக்கலாம்; கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கு ரோல் ஈசி மோட்வீல் Roll easy mote wheel என்ற சக்கரத்தை உபயோகப் படுத்தலாம்; மரச்சக்கரத்தை விட இது சீக்கிரமாகச் சுற்றுகிறது. அது ஓட்டுகிறவர்க்கும், மாடுகளுக்கும் சிரமம் கொடுக்கிறதில்லை. இவைகளுக்கு வேண்டிய காலம், உழைப்பு, செலவு, எல்லாம் மிகவும் குறைச்சல்.

இப்போது தண்ணீரில்லாக்குறை பெருங்குறையாகவிருக்கிறது. துளி தண்ணீரை வைத்துக்கொண்டு நாம் சாகுபடி செய்வதெப்படி? குளத்திலிருக்கும் தண்ணீரோடு கிணறுகளும் வெட்டி தண்ணீரும் சிறுபான்மை பாய்ச்சிக் கொள்ளலாம். நஞ்சைப் பயிர்களைவிட தோட்டப்பயிர்கள் அதிகப்பலனைத் தருவது மல்லாமல் அவைகளுக்கு குறைச்சலான தண்ணீர் இருந்தால் கூடப்போதும். முத்துச் சோளம், சேனைக்கிழங்கு, வாழை, கரும்பு, கம்போடியாபருத்தி, மிளகாய், புகையிலை, வெங்காயம், இன்னும் இவைபோன்ற சில பயிர்களுக்கு நெற்பயிருக்கு வேண்டிய அளவு தண்ணீரைவிடக் குறைச்சலாக யிருந்தாற் போதுமானது: நெல்லிலும் அறுபதாங்குறுவை, குங்குமச் சம்பா முதலியவைகள் மூன்று அல்லது மூன்றரை மாதங்களில் விளையும்; சில சமயங்களில நெல்லைப் புழுதியாக விதைத்து ஜலம்பெருக்கில் நஞ்சைகளாகச் செய்வதுண்டு. இதுவும் நல்லபலனைத் தருவதோடு ஜூலை ஆகஸ்டு மாதங்களில் விதைக்கப் படுகின்றன: மழைகாலந் தவறி

ப்போகிற சமயத்தில் இம்முறையைக் கைக்கொள்ளலாம். நல்ல விதையை விதைக்கவேண்டும்; தகுந்த பக்குவமில்லாத நூறு விதைகளை விதைப்பதைவிட பக்குவமடைந்த ஒரு விதையை விதைப்பது மேலானது. நாற்றுப்பிடுங்கிநடும்போது நன்றாகப் பயிராவதற்கு வேண்டிய வெளிச்சமும் இடமும் இருக்கும்படி இடையே தகுந்த இடம்விட்டு நடுதல் நல்லது. பல விதைகளும் வேர்ப்பயிர்களும் சண்காக்ஷியில் வைக்கப்பட்டிருக்கின்றன. எல்லோரும் சற்று நிதானித்து அவைகளைப் பார்க்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல் கொட்டகையில் ஒரு டில்லி எருமைக்கடாவும் அயர்ஷயர் காளையும் இருக்கின்றன பாருங்கள். இவைகளால் உண்டாகும் கன்றுகள் பெரியவைகளாயும், பலமுள்ளவைகளாயு மிருப்பதோடு பாலும் சிலாக்யமாயிருக்கிறது. நமது சமஸ்தானம் கால்நடையபிவிருத்திக்கு மிகவும் லாயக்காகவிருக்கிறது. நமது நாட்டு மாடுகளை நீங்கள் பார்த்திருக்கலாம். அவை உழுவதற்கும், கபிலைக்கும், வண்டி இழுப்பதற்கும் உபயோகப் படுகின்றன. இதுவரை இந்த இரண்டு பாரம் காளைமாடுகளால் 140-எருமைக் கன்றுகளும், 92-பசுங்கன்றுகளும் பிறந்திருக்கின்றன.

இந்தக் கால்நடைகளுக்கு வேண்டிய ஜீவனத்திற்கு என்னவழி? ஜீவிக்காக வேண்டிய பயிர்களை விளைவிக்கும் நிலங்களுக்கு கவர்ன்மெண்டாரவர்கள் தீர்வையை வஜா செய்திருக்கிறார்கள். சில காடுகளில் சுவல்பவரி செலுத்தி ஆடு மாடுகளை மேய்த்துக் கொள்ளவும அநுமதித்திருக்கிறார்கள்.

விவசாயத்தைத் தவிர கிருஷிகர்கள் வேறு தொழில்களையும் கைக்கொள்ளலாம். டெய்ரிகள் (பசுமாடுகளை வைத்து வளர்த்தல் பால் வெண்ணை முதலியது தயார் செய்தல்)ஏற்படுத்தி சுத்தமாயும் சுயமாயும் பால் விற்பனை செய்யலாம். கோழி வளர்த்தல் மிககலாபகரமானது. "White Leg Horn" என்ற ஜாதிக்கோழி ஒரு வருஷத்தில் 250-முட்டைகள்வரை இட்டிருக்கின்றது, நம் நாட்டுக்கோழி முட்டைக்கும் அதன் முட்டைக்கும் அளவிலும நிறையிலும் மிகுந்த வித்யாசமிருக்கிறது என்றும் சாகுபடி இல்லாத காலங்களில் நூல் நூற்றல் நெசவு செய்தல் உபதொழில்களாகு மென்றும் விவசாயம் நன்கு நடைபெறக் கூட்டுறவு அவசியமென்றும் இப்பயிர் செடியாகி [illegible] குடியானவர்கட்கு நிழலைக் கொடுத்து நன்மையடையக்

செய்யுமென்றும் முடிவுகூறி தலைவரைக் கண் காட்சியைத் திறக்கும்படி கேட்டுக் கொண்டார்.

தலைவரவர்கள் கரகோஷத்திடையே தனது முகவுரைப் பிரஸங்கத்தைச் செய்தார்:

இதன் பின்னர் வல்லத்திராகோட்டை மிராசுதார் சின்னையா அம்பலகாரர், புதுக்கோட்டை பட்டரை ஆறுமுகம்பிள்ளை இன்னும் சில கிருஷிகர்கள் தங்கள் தங்கள் விவசாய நூதனமுறைகள் அநுபவங்களை நன்கு விளக்கினார்கள். தலைவரவர்கள், விவசாயிகள் பொறுமையுடன் புதிய முறைகளைக் கையாண்டு, உரங்களை உபயோகப்படுத்தி ஜாஸ்தி பலனடைய வேண்டுவதே தனது பிரார்த்தனையென்று கூறி முடிக்க, அபிவிருத்தி இலாகாத்தலைவர் தலைவரவர்கட்கு வந்தனோபசாரங்கூறி மகத்தான விவசாய மேன்மையும் பண்டை முறையையே புதிய முறையென்று கூறி பலமேற்கோள்களுடன் எடுத்துக் காட்டி சபை 5-மணிக்குக் கலைந்தது.

காக்ஷிசாலையில் பின் சொன்னவை வைக்கப் பட்டிருந்தன:—

(1) நெல் வகைகள், (2) புஞ்சை தான்யங்கள், (3) காய் தான்யங்கள், (4) அதன் பயிர்கள், (5) தோட்டச்சாகுபடி காய்கறி வர்க்கங்கள், (6) உருவிலும் பருமனிலும் வித்யாசமுள்ள முட்டைகள், (7) பலவகை எருக்கள், (பாரி கம்பெனியாருடையது) (8) நூதன விவசாயக் கருவிகள் (9) பரச்சேரி கலாசாலை துண்டுகள், (10) கண்ணங்குடியில் தயாராகும் வெல்லத் தினிசுகள் (11) லால்குடி வெல்ல மாதிரிகள் (12) விவசாய சம்மந்தமான படங்கள் (13) போலிக்கிடா அயர்ஷயர் மாடு இவைகளாம். தினந்தோறும் விவசாயம், ஆரோக்யம், கல்வி சம்மந்தமான மாயக்கண்ணாடிக் காட்சிகள் அவ்வவ்விலாகாதாரரால் இரவுகளில் காண்பிக்கப்பட்டன. காட்சி 10-வுடன் முடிவுபெற்றது.

## REVIEW
## புஸ்தக விமர்சனம்

ஆரோக்கிய தீபிகை:—தமிழ் நாட்டில் சுகாதார சம்பந்தமாக வெளியிடும் பத்திரிகை இது ஒன்றே. ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத பல அரிய வியாசங்களும், குறிப்புகளும், வைத்திய யோசனைகளும் பல்மேதாவிகளின் அபிப்பிராயங்களும் வாழ்க்கைக் குரிய நற்புத்திகளும் இப்பத்திரிகையில் தடவைதோறும் பிரசுரிக்கப் படுகின்றன.

இதைக் குறித்து எவ்வளவு சிலாக்கித்து எழுதினும் தகும். ஒருமுறை இப்பத்திரிகையை வாசித்துத் தெளிவு கொண்டவர்கள் என்றைக்கும் இதைப் பெற விரும்புவார்கள் என்பது திண்ணம். இதுஒரு மாதஸஞ்சிகை; வருஷ சந்தா ரூ1-8-0 விலாஸம்:— 323, தம்புசெட்டித் தெரு சென்னை.

# COCONUT.

(continued from page 13 of No. I of Vol. XI)

## தென்னை கண் பதிப்பு முறை

(11வது வால்யூம் 1வது நம்பர் 13ம் பக்கத் தொடர்ச்சி.)

பெரிய மரம் தலைப்பாரும்போது கீள்கண் போட்டு விருத்தியாய் விட வேண்டும். பெரிய மரம் 50 வயதானபின் கீள்கண் போடுவது இளங் கன்றுக்கு முதுமர நிழலும் வெயிலுங் கலந்தடித்து உண்டாய் விடும். 30-வருட மரத்தின்கீழே கண் போடுவது நிழல் அடர்ச்சி நேராயுண்டாக மாட்டாது. ஒருக்காலுண்டானாலும் முது மரமும் இளங் கன்றும் ஒன்றோடொன்று மோதி காய்ப்புக் க்ஷணம் சம்பவிக்கும். பெரிய மரந் தலைப்பாரியபின் கீழ்கண் போடுவது விர்த்திக்குவாராது. ஊக்கமும் தளர்ந்துவிடும்.

### வேலியடைப்பு

ஐரோப்பியர் நிலங் கைப்பற்றியதும் வேலியமைத்த பின் நிலஞ் சமப்படுத்தி பயிர் செய்வர். இதை சிலோன் தோட்டங்களைப் பார்க்கத் தெளிவாய்விடும். அங்கே கிளுவைக் கம்பு நெருக்கமாயுண்டாக்கி 1½ அடி உயரத்துக் கொன்று வீதம் 3 வரிசை மூங்கில் பட்டை வைத்து இரும்புக் கம்பியால் கட்டி முருக்கி விடப்படுகிறது. மூங்கில் பட்டை கெடுந்தோறும் புதுப்பட்டை போடப்படுகிறது. வேலியில் இடைவெளியே யிராது. கிளுவைக் கம்புக்கு உரம்வைத்து வளமாயுண்டாக்குவர்- அவ்வளவு திருஷ்டி இந்தியாவிலில்லை. மேற்குக் கரைப் பிரதேசமும், தஞ்சை ஜில்லாவும், ஆடா தோடை செடியும், உண்ணி (ரூல் பென்சலவ்வளவு கனமுள்ள 10-20 கிளையும் 5—6 அடி நீளமும், கொய்யா இலை போன்று சித்திலையும் இலை சுருக்கு குடுத்தும் வெளிரிய இலையும், மாதளைப்பூநிறமான கொத்து பூக்களும் 10-20 மிளகு கொத்தாய் அடுக்கிய மாதிரி கருப்பு விதையும், செடியண்டை போனால் விகாரமாய் வீசும் (விரை உண்ணிபோலிருப்பதால் உண்ணி செடி என வழங்கும்) செடியும் வேலியாக விருக்கும்- குதிரை வெளியே ஓடிய பின் லாயக்கதவை சாத்தி பூட்டியது போன்று வேலி பந்தோபஸ்து நகைப்புக் கிடமாக விருக்கும். சென்னையில் சில தோட்டங்களுக்கு மதில்சுவரும், சில தோட்டங்களுக்குக் கொடுக்காப்புளி வேலி யமைத்திருக்கும். தமிழ் ஜில்லாக்களில் மண் சுவர் வைத்து சித்து கத்தாளை யமைத்த தோட்டஞ் சில. ரயில்வே லயின் யானைக் கற்றாளை வைத்த தோட்டஞ் சில. கொடுக்காபுளி பூவரசங் கம்பு வைத்த தோட்டங்களுமுண்டு. மேல்கரை ஜில்லா காசர்கோட் சர்க்கார் தென்னைப் பண்ணையில் மண்ணுள்ள பாகங்களுக்கு சுவர்

வைத்தூர் மணல் தோட்டங்களுக்கு முந்திரி (முண்டிமா) மரம் சேரான் கொட்டை (சேங்கொட்டை) மரம் நெருக்கமாய் வைத்து முள் சம்பி வேலியமைக்கப்படுகிறது மேற் கரை பிரதேசம் நீர்க்கால்ரோட்டு பாதை இருகரை தென்னைகளை ஆடுமாடு தின்றழிப்பதில்லை! அங்கே ஒவ்வொருவரும் தென்னையில் அபிமான மிருப்பதால் வழிமதி செய்வதில்லை. கீழ்கரை ஜில்லாவில் கால்வாய்கரை ரோட்டோரம் வைத்த தென்னை வேலியின்றி சேதா யுண்டாவதில்லை. ஆடுமாடு தின்றழிமதி செய்வதாலுண்டாக தடைப்படுத லோக்கல் போர்டு ரோட் கண்களுக்கு குதம்பை வேலி கட்டிகள் உண்டாகிவிட்டது. அதே முறையை விவசாயிகளனுசரிப்பது நலம். தென்னையை ஆடுமாடு தின்றால் உண்டாக மாட்டாதென்பதை எச்சரிப்பாய் கவனித்து தென்னை விருத்தி செய்ய வேண்டும்! சுவர் கற்கால் வேலிப் பாப்பு குடிகொள்ளும். சுவர் ஓரம் கொடுக்காபுளி யுண்டாக்கி கரை யழிப்பது நலம். தேசத்தில் விரைந்து நெருக்கி வளர்ந்து அதிகரிப்பதால் விரகு தரும மரங்களை வேலியாக வைப்பது வேலி பந்தோபஸ்தாயும் விருகுக் கஷ்டமின்றியமையும்.

ராமநாதபுரம் ஜில்லா ராஜபாளையம் தென்னந் தோட்டங்களுக்கு வேலி கிடையாது. தனி நபர் தோட்டம் கிடையா. எல்லாத் தோட்டமுந் தொடுத்தாற்போல் ஒன்றாக விருக்கும். அங்கே ராஜாக்கள் ஐக்ய மத்ய தருமம் பூண்டொழுகி நடப்பதால் களவு சம்பவிப்பதில்லை. தேசாபிவிர்த்தியாக ஐக்கிய மத்தியத்துக்கு மிஞ்சிய வாழ்வே கிடையா.

இன்னும் வரும்.

## தென்னை பிழைதிருத்தம் வாலம் 10

| பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 246 | 1—2 | 4 | என்பதை | 246ம் பக்கம்பூராவுமனுசரிக்க. |
| 247 | 7 | 1 | முட்டை | கோயனுக்கருக்கள் |
| 268 | 2 | 13 | முறை நெத்து கழித்துவிலக்கு முறை | முறைநெத்து கழித்துவிலக்கு முறை |
| 269 | 7 | 1 | மட்டை | மட்டைவடு |
| 269 | 11 | 2—3 | குலைகாம்புமுதல் நீளமில்லை திருக்கவேணும்வரை | நூறு வடித்துவிடுக |

270ம் பக்கம் 6வது பாரா ஒரு அடித்து பின்வருவன சேர்க்க. நன்றாய்ப் பழுத்த நெத்து மஞ்சள் நிறம் மாறுமுன் பாவுவது 3 மாதத்தில் கண் முளைக்கிறது. நெத்துபறித்து மேற்றொலி கருத்து உலர்ந்த பின் பாவுவது 8 மாதம்வரை முளைக்கிறது. முளைப்பு தாமதமென்னவென்று ஆராயப்பட்டது. மஞ்சள் நிறமான நெத்து மேற்றொலி உரித்து மணியை கவனிக்கவும் பட்டது.

உரித்தமணி உச்சியில் 3 கண்ணெடுப்பதில் கண்ணில் முளையூடுருவி முளைக்கும். அந்தக் கண்ணின்மேல் லேசானதோடும் அதன் கீழுள்ள சதை பருப்பு மத்தியில் லேசு மஞ்சள் நிறமான முளையிருக்கும். முளை திப்பிலிக் காயளவு கனமும் அரையே அரைக்கால் இஞ்சு நீளமிருக்கும். அந்த முளை சதையுடன் ஒட்டி சேர்ந்திருப்பதால் காத்துபாவிய நெத்து ஜலமேற்கவும் தாமதமின்றி முளைக்கிறது.

தோடுகருத்த நெத்திலோ தேங்காய் சதையுலர்ந்து சுருங்கியுடன் சேருமல் லேசாய் வெளிகொடுத்ததை நுட்பமாய் பார்த்தாலறியலாம். முளையும் வத்தி சுருங்கியும் மத்தியில் வரை விழுந்து இடைகிருத்திருக்கிறது. அப்போ முளை மேலே கண் தோட்டில்மட்டும் ஒட்டியிருக்கும். உலர்ந்த பாகம் ஜலமேற்று சுருக்கு நிமிர்ந்து முளையுந் தேங்காய் சதையும் ஒன்றுசேர்ந்து முளை யூடுருவி முளைக்கத் தாமதமாவதாகத் தெரிகிறது.

நெல் முதலிய தானியங்கள் நன்றாயுலர்ந்து பாவாதவரை நேரே முளையாது. இலுமிச்சு கிச்சிலி வகைதினுசு பழத்திலிருந்து விரையெடுத்தவுடன் பாவவேண்டும். தாமதிக்கில் விரைமேல் தொலி வெடித்து முளையுண்டாகா.

அந்த முறையில் பிந்திய நிபந்தனை தென்னை யனுசரிப்பதாக வெளியாகிறது. முன் காசர்கோட் சர்க்கார்பாரம ரிப்போர்ட் தழுவி எழுதப்பட்டது. இப்போ நேரில் ஆராய்ந்தது தெரிவிக்க நேர்ந்தது உலர்ந்த நெத்து 1 வாரம் ஜலத்தில் போட்டெடுத்து பாவிப்பார்க்கலாம்.

| பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 272 | 1 | 7 | ர்மாத்துமகரந்தம் சிரேஷ்டமானமரத்தால் | வேருசிரேஸ்டமான மரத்து மகரந்தம் கலந்து |

| பக்கம் | பாரு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 272 | 2 | 17 | சிலபாகம் | சிலபனைமரம் |
| 273 | 2 | 7 | வேர் தளமட்டத்துக்கு முக்கால் அடி உயரம் ஜாஸ்திபின்னியிருது | வேர்கள் ஒன்றோடொன்று ஜாஸ்தி பின்னியிருது. தளமட்டத்துக்குமுக்கால் அடிஉயரம் |
| 275 | | 10 | பூபாழாவதே | பூமியிலுள்ள பயிருணவு பாழாவதே |
| 275 | | 26 | 8—10 தபா வென்பதை | 5—6 தபா |
| 276 | | 8 | பிலா | பிலா இலுப்பைபுன்னைமரம் |
| 276 | | 28 | மேலபடி | மேல்படி |
| 276 | | 5 | க்குகிழாக | பின்வருமாறமைத்துவாசிக்க. |

இளந் தென்னை மட்டை வளமான நிலத்தில் 32 அடியிருக்கும். கன் மட்டை 15 வருடம்வரை நீளமா யிருந்து வயசு ஆக ஆக குருகுவ தியல்பானதால் 26 அடி போதுமானது. கேவலமான நிலத்தில் கன் மட்டை கூட 27 அடியிருது.

கிருஷிகன் 10வது வாலம் 292ம்பக்கம் 4வதுபாரு 4வது வரியில் (கன்றம்டங்கடி) என்பதை படித்து (பகன்றம்கிடங்கடி) என்று திருத்திக் கொள்க.

மேல்படி 292ம் பக்கம் 1வதுவரியில்(3) என்பதை (4) என்று போடவும்.

மேல்படி பாரு 7வதுவரிமுடிவில் (பக்) என்பதை (பக்க) என்று போடுக.

மேல்படி 293ம் பக்கம் 2வது பாரு 5ம் வரியில் (களிமண்) என்பதை (களிமண் பூமியானால்) என்றமைக்கவும்.

## கிருஷிகன் 11-வது வாலம் திருத்தங்கள்.

8ம் பக்கமுகப்பில் (கண்பதிப்பு முறை) என்றமைக்கவும்

கிருஷிகன் 11-ம் வாலம் 8-மபக்கம் 3-ம் பாரு முடிந்த உடன் பதிகக்கன்? வைக்கும் நிலத்தில் உயரமாய் வளருகிற வாழைகளான

செவ்வாழை, சிறுமலைவாழை, பேயன், செங்கதலி, வெள்ளை சிங்கன் மொந்தன் வாழைகளை வைத்து 1-வருஷம் வளர்ந்தபின் பதிக்கண் பதிப்பது சூரிய உஷ்ணபாதை சம்பவியாது என சேர்த்தமைத்து வாசிக்க வேண்டும்.

8- 12ம் பக்கம் அடிக்குறிப்பில் (முற்சஞ்சிகை) என்பதை (கிருஷிகன் 10வது வாலம்) என்று திருத்துக

11ம் பக்கம் 1வது பாரமுடிந்தவுடன் (ஜலம் பாயாத தென்னை காக்கு முறைபவசியம். கிருஷிகன் 1வது வாலம் 95ம பக்கம் 4வது பாருவும், 96ம்பக்கம் 3வது பாருவும், பார்த்து தழுவிக் கொள்க) என அமைத்துக் கொள்ள வேணும்.

11-ம் பக்கம் 4-வது பாரு 4-வது வரியில் (மண்ணினும்) என்பதை (மனைாய்) எனதிருத்துக.

11-ம் பக்கம் அடிக்குறிப்பில் தூங்குமூஞ்சிமரம் நிழல் தருவதுண் மைபானுலும் வேர் எங்கும் பரவுமாதலால் அதன் நிழலில் வேறு தினுசுகள் பலன தருமென்று பத்திருசிரியரால்மறுக்கப்படுது. *குற்றாலம் அருவிக்கரை தோட்டத்திலும், தெக்குமலை எஸ்டேட்டிலும் தோதகத்திமர நிழலில் சாதிக்காய் மரம் கிராம்புமரம் உற்பத்தி செய்து காய்த்து வருவதால் அந்த நியதிப்படி தூங்கு மூஞ்சிமர நிழலில் விசேஷதினிசு பலிதமாகலாமென யரிவித்தோம்.

மேமாத முதல் செப்டம்பர் மாதம்வரை வெயில் காலம் விசேஷ தினுசுச் செடிகள் தூங்கு மூஞ்சிமரம் நிழலிருப்பது உஷ்ணம் மட்டுப் படலாமென்றும் அக்டோபர் மாதம மழையாரம்பிக்கவும மூரகிளைகள் தளைகள் வெட்டி நஞ்செய்க்கு உரமாகக வடலாம். மரம வெட்ட வெட்ட தழுத்துண்டாகும். வருஷம பிற்பாதி மாதம்வெயிலடிக்கலாம். நிழலிரு. கெடுதியிருவென பிரேரேபனை செய்தோம்.

மலை மண்வளம், சீதோஷ்ணம்பதம் வேறு. அந்த நிலைமை நாட்டுக்கு பொருந்தாவென கருதி மாநிழலில் வேறுதினுசுக் கேற்காவென பத்திருசியா அபிபபிருயப்படுகிறதாகத் தெரிகிறது

---

* நாம் நேரில் பார்த்தும், கேட்டும், அனுபவப்பட்ட முறைகளையும், நிபுணர்களால் பரிசோதித்து ஆராய்ந்தறிந்த முறைகளையும் அநுபவ பூர்வமாய்ச் சொல்லுகிறோம். பல மரங்களின் நிழல்சன பலவிதமான உஷ்ணம் தரும் என்பதை நிருபமேயர் கவனிக்கத் தவரியது வருந்தத்தக்கது.

பத்.

வாழை †கலக்கப் போட்டும் ஊடே அகத்தி போட்டும் விசேஷம் தினுசு பலிதஞ் செய்யலாம். இளங்கன் உஷ்ணபாதை படாது வளர்ந்து விட்டால் கண்முத்தும்போது உஷ்ணபாதையைச் சட்டை செய்யாது உண்டாகி விடலாம். வாழை 4-5 வருஷம் அகத்தி 7-8-வருடமிருந்து நிழல் கொடுத்து காக்கும். இறவை மாட்டுக்கு அகத்தியிலை புஷ்டியான உணவாகும்.வாழைநிழலில் தென்னங்கன் விருத்தியாவது போலும் குளிர் தேசத்திலிருந்து வந்த ஐரோப்பியர் உத்யோகம் செய்து பழகவும் இந்தியா உஷ்ணம்தாங்கும் சக்தி யேற்பது போலுமே என்று பாவிக்க வேண்டியது. வாழை முதலிய பூசாரம் கிரகிக்குமாதலால் விசேஷ தினுசு இளங்கன்றுக்கு உரமிடாவிடின் வாங்கக்கூடாதென்று) அமைத்துக் கொள்ள வேண்டும்.

10ம் பக்கம் 1வது வரியில்(இத்தியாதி யேதுக்களால்) என்பதை மாற்றி (இத்தியாதி நிலமையில் தென்னை எந்தசமயமும் பேத்து நடினும உண்டாவதாகத்தெரிவதால்)என்று அமைக்கவும்.

10-ம் பக்கம் 3-வது பாரு 10-வது வரிக்கு கீழ் (சொற்பமாய்க் காய்க்கிறது) என்றமைக்க வேண்டும்.

வெ. ப. திருமலையப்ப முதலியார்
வெள்ளக்கால் போஸ்டு, கஸ்பா

---

† நிருபநேயர் அகத்தி நடுவதற்காக வாழை கலக்கப் போடவேண்டுமென்கிறார். அகத்தியின் வேரும் நிழலும் படரும் விஸ்தீரணத்தையும் ஒரு தூங்கு மூஞ்சி செடியின் வேரும நிழலும் படரும் விஸ்தீரணத்தையும் எவ்வாறு ஒப்பிடலாம்? அகத்தி நிழலுக்காக வாழை கலக்கப்போடப்பட்டால், தூங்கு மூஞ்சி நிழல் வேர் படரும் விஸ்தீரணத்தில் செடி எவ்வாறு கலக்க நடுவது? ப. ர.

## News & Notes
## குறிப்புகள்

### கிருஷ்ண ராஜேந்திர விவசாய தர்மப் பாடசாலை

இந்த ஸ்ரீ கிருஷ்ண ராஜேந்திர விவசாய தர்மபாடசாலையை ஏற்படுத்தப்பொதுஜன சேவையில் அதிக ஆவேசமுள்ள ஸ்ரீமான் உக்கிரகௌடா அவர்கள் கல்லால் கட்டப்பட்ட இரண்டு மாடியுள்ள விசாலமான ஒரு வீட்டையும், 6½ ஏக்கர் புஞ்சை நிலத்தையும் நன்கு நீர்ப்பாச்சம்படி வசதியாயுள்ள 1 ஏக்கர் நஞ்சை நிலத்தையும். ரொக்கமாக 17,000 ரூபாயும் கொடுத்திருக்கிறார்கள்.இந்த வித்யாசாலைக்கு ஏற்படும் இதர செலவுகளை மைசூர் சர்க்காரே ஏற்றுக்கொள்ளுகிறது. தும்கூருக்கு 28 மைல் தூரத்தில் சிக்கனஹள்ளி என்ற கிராமத்தில் இப் பள்ளிக்கூடம் இருக்கிறது. இந்த

சமஸ்தானத்தில் சுதேச பாஷையில் விவசாயக் கல்வியை போதிப்பது இதுவே முதல் முயற்சியாகும்.

* * * *

## நாஷனல் லைவ்ஸ்டாக் ரெஜிஸ்டிரேஷன் பாங்க்

ஆடுமாடு முதலிய கால்நடைகளைப் பதிவு செய்து, அவற்றிற்கு அபாயம் வந்தால் அவைகளின் கிரயத்தைக் கொடுக்க ஒருகம்பெனியார்கள் முன்வந்து சென்னை மாகாணம் முற்றிலும், ஜில்லா, தாலூகா, கிராமச் சபைகள் ஏற்படுத்தி காரியதரிசிகளை நியமிக்கிறார்கள். தாலூகாக் காரியதரிசி சம்பளம் மீ ரூ 120ம் ரூ 100 படியும் ஒரு தாலூகாக் காரியதரிசிக்கு 9 சூபர்வைசர்களும், ஒரு சூபர்வைசருக்கு அடியில் 15 கிராமசபைக் காரியதரிசிகளும் இருக்கிறார்கள். ஒரு சூபர்வைசருக்கு மீ 1க்கு சம்பளம் ரூ. 40 படி 15 இன்னும் இதர சன்மானங்களும் உண்டு.

ஆஸ்டிரேலியா, அமெரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களிலுள்ள தேசங்களில் கால்நடைகளை இன்ஷூர் செய்து விவசாயிகள் எதிர்பாராத நஷ்டங்களிலிருந்து தப்புகிறார்கள். கடனாலும் வரியாலும் கஷ்டப்படும் நம் நாட்டு ஏழை மக்களுக்கு இப்புது முறை உதவியாயிருக்கும். ஆண்டுதோறும் செலுத்தும் கட்டணங்கள் குறைவாயிருந்தால் ஏழை விவசாயிகள் அனேகரும் சேருவார்கள். க்ஷேமமுமடைவார்கள். ஆங்கிலம் படித்து விட்டு அலுவல் இன்றி அலையும் அநேகருக்கு இக்கம்பெனி உத்தியோகங்கள் கொடுத்து உதவுகின்றது. போகப்போகத்தான் இக்கம்பெனியின் நிர்வாகம் தெரியவரும்.

* * * *

இங்கிலாந்தில் நடந்த காட்சிசாலையில் இந்தியாவிலுள்ள தென்னை நார் வைத்துக் காட்டப்பட்டதில் சென்ற வருஷத்தில் 15000 முதல் 20000 டன் வரை தென்னை நார் விற்றதாகத் தெரிகிறது.

* * * *

இவ்வருஷம் சென்னை ஹைலண்ட் கிரௌண்டில் நடந்த ஜீவர்தாரக் காக்ஷிசாலையில் கொண்டுவரப்பட்ட பசுக்கள் முதலியவைகள் அபிவிருத்தியடைந்து நல்லஸ்திதியிலிருப்பதாகத் தெரியவந்தது. சர்க்காரார் பொலிகாளைகளை வாங்கிவைத்து அவைகளின் மூலமாய் உற்பத்தியான கன்றுகள் நல்லஸ்திதியிலிருந்தன. அக்கன்றுகளுக்கு மட்டும் சுமார் ரூ 250 வரை வெகுமானங்கள் கொடுக்கப்பட்டன.

* * * *

வட ஆர்க்காடு ஜில்லா காவேரிப் பாக்கத்தில் கூட்டுறவு சங்க ஆதரவில் நடந்த காக்ஷிசாலையில் "உழுவதில்" யார் சரியாய், அதிக விஸ்தீரணம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உழுகிறார்களென்று ஒரு போட்டி ஏற்படுத்தியதில் 12 கிருஷிகர் போட்டிக்கு வந்தார்கள். அவர்களில் மூவர் பரிசு பெற்றார்கள்.

# CORRESPONDENCE.

## கடிதம்

கிருஷிகன் பத்திராதிபர் ராவ்பகதூர் ஸ்ரீமான் கன்னிமயிக்க புண்ணிய சீலர் J. செல்வ ரங்கராஜுலு துரையவர்கள் திவ்ய சன்னிதிக்கு 1908ம் நம்பர் சந்தாதார் J. S. M. சாகிபுலுணக்குமாய் வர்தனம் தந்து விண்ணப்பித்துக் கொள்வன:—

இத்துடன் சந்தா தொகைக்கு தபால் முத்திரை யனுப்பியிருப்பதால் பெற்றுப் பத்திரிகையை ஒழுங்காயனுப்பித்தரப் பிரார்த்திக்கிறேன்.

பத்திரிகை பரோபகாரமாய் நடத்திவரப்பெற்றும் போதிய ஆதரிப்பில்லாததால் பத்திரிகையை நிறுத்தி விடுவதற்கான ஆலோசனைகளடங்கிய விஷயம் பங்குனிப் பத்திரிகையில் பார்த்து மிக்க மனவருத்தத்தைக் கொண்டிருக்கிறேன். எவ்விதத்திலும் எக்காலத்திலும் ஜீவ காருண்யப் பத்திரிகையை நடத்தியே தீரவேண்டும். போதிய சந்தாதாரர்கள் சேரா விடினும் வேறு எவ்வழியிலாகிலும் பரோபகார நிமித்தமாய்ப் பொருள் சேகரித்து இப்பத்திரிகையை இடைவிடாது தளரவிடாது நடத்தித்தான் தீர்க்கவேண்டுமென்று கனமிக்க பத்திராதிபர் பூரணமான நல்லெண்ணம் கொண்டுவிடுவாராகில் கிருஷியையே ஜெகத் சீவனத்திற் காதாரமாக வமைத்தருளிய ஈஸ்வரர் நம்கிருஷிகன் நீடூழிவாழ பெரிய ஐஸ்வரியத்தைத் தந்து அருளுவார் என்பது திண்ணம்.

ஆகையால் கனம் பத்திராதிபரவர்கள் ஒரு விதத்திலும் மனந்தளராமல் கிருஷிகன் பத்திரிகையை கைம்மாறு கருதாப் பரோபகார நிமித்தமாக சதாவும் நடத்தித் தந்தருள்வாராக.

இப்போது நம் பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் எத்தனை யென்றும் எத்தனை இன்னும் சேர்ந்தால் பத்திரிகையை ஒழுங்காய் நடத்த அநுகூலமாயிருக்குமென்பதையும் தெரிய விரும்புகிறேன்.

தங்களால் கூடுமனவரை சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கவேண்டுமென்று நம் சந்தா நேயர்களை மிகவும் சிரம்தாழ்த்தி வேண்டிக் கொள்கிறேன்.

பயிர் ஷூர்க்கமாயும பயிருக்கு தக்கமாசூல் இல்லாததாயும் இருக்கும் படியான நிலைமைக்கு எவ்வித நிவர்த்திசெய்து அதிக மாசூல் கிடைக்கும் படி செய்யலாமென்று வினவிய நிருபருக்கு அவ்வருடம் பங்குனி பத்திரிகையில் செல்லபிவிருத்தி என்ற விஷயத்தைப் பார்க்கும்படி எழுதப் பெற்றிருப்பதாலும் அப்பத்திரிகையாரிடமுமில்லாததாலும் அடுத்த சஞ்சிகையில் மற்றொருமுறைப் பிரசுரிக்க அல்லது அப்பத்திரிகையை அனுப்பித் தரப் பிரார்த்திக்கிறேன்.

தமிழ்ப் பேராசிரியன் மாகறல்—கார்த்திகேய முதலியாரவர்களியற்றிய மொழி நூல் நான் வெகுநாளாய் ஆவலோடு எதிர்பார்க்கும் நூலொன்றாகும். என் அட்ரசுக்கொரு புஸ்தகம் அனுப்பித்தரச் செய்ய வேண்டுகிறேன்.

ஜமால் சயத்மஹமத் ராப்பு,
மேலப்பாளையம்

பதில்

அக்ஷய வருஷம் பங்குனி மீ பத்திரிகை நிருபநேயர் கேட்டுக்கொண்ட பிரகாரம் ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறது.

மாகறல் கார்த்திகேய முதலியார் அவர்கள் இயற்றிய மொழிநூலைத் தங்களுக்கு வி. பி. யில் ஒருபிரதி அனுப்பும்படி ஏற்பாடு செய்திருக்கிறது.

ப. ர்.

கனம் "கிருஷிகன்" பத்திராதிபர் அவர்கள் சமூகத்திற்கு அன்பார்ந்த ஐயா,

கீழ் விவரிக்கப்பட்ட விஷயங்களுக்கு தயவு செய்து "கிருஷிகன்" வாயிலாகப் பதிலளிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

1. எலுமிச்சை சாகுபடிக்கு எம்மாதிரியான நிலம் லாயக்குள்ளது. எம்மாதிரி நிலத்தில் அதிக காய்ப்பு உண்டாகும்? நன்றாய் காய்ந்தால் வருஷம் 1க்கு ஒரு மரத்தில் எவ்வளவு லாபம் கிடைக்கும்.

2. குடகு முதலிய இடங்களில் விளையும் ஆரஞ்சிப் பழச்செடிகளை எங்களுடைய ஊரில் அதாவது திரிச்சியில் வைத்துப் பயிர் செய்தால் அம்மாதிரி ருசியுள்ள பழங்கள் கிடைக்குமா? கண்கள் எவ்விடத்தில் கிடைக்கும்.

3. சாத்துக்குடி ஆரஞ்சு, பம்பளிமாஸ் இவைகள் உயர்ந்த ஜாதியுள்ள பழங்களாவது (நாத்துவிட்டு நட) கன்றுகளாவது எவ்விடத்தில்கிடைக்கும்.

4. உயர்ந்த தினுசு (அதாவது சுளை அதிக பருமனுள்ள பழங்கள் கிடைக்கக்கூடிய தினுசு பலாக் கன்கள் எவ்விடத்தில் கிடைக்கும். அல்லது பழங்களை வாங்கி நாத்துவிட அப்பேர்ப்பட்ட பழங்கள் எவ்விடத்தில் கிடைக்கும்.

இப்படிக்கு
N. கிருஷ்ணசாமி பிள்ளை.
(கூடலூர், முத்தரசநல்லூர் போஸ்ட், திருச்சிராப்பள்ளி.)

பதில்

(1) வடிகால் வசதியுள்ள எல்லாத் தோட்டக்கால் நிலங்களிலும் எலுமிச்சை செடிகள் வைக்கலாம். செடி ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு சரியானபடி காய்த்தால் ரூ. 15 வரை இடத்திற்குத் தக்கபடி கிடைக்கும்.

(2) குடகு முதலிய இடங்களில் விளையும் கமலாஞ்சு மரங்கள் சமதளமான பூமிகளில் இளங்கன்றுகளாயிருக்கும்போது தாக்குப்பிடிப்பது

சற்று கஷ்டமாயிருக்கும். அத்துடன் அது சமுத்திர மட்டத்திற்கு மேல் 2000 அடி உயரத்திற்கு மேல்தான் நன்றாய் காய்க்கும். குடகுதேசத்தில் அதிக மழை பெய்கிறது. நாம் குடகிலிருந்து செடி கன்றுகளை வரவழைத்து செடிகளை வெயிலில்தாக்குப் பிடிக்கும்படி சன்னஞ் சன்னமாக வழக்கப்படுத்தி நட்டதில் இப்போது சுமாரான பலன் கொடுத்து வருகிறது. ருசியிலும் பருமனிலும் குடகில் விளையும் பழங்களுக்கு நமது தோட்டத்துப் பழம் தாழ்ந்ததல்ல. கன்றுகள் தேவையானல் குடகிலிருந்தே வரவழைக்க வேண்டும்.

3. சாத்துக்குடி ஆரஞ்சி பம்பிளிமாஸ் முதலிய கன்றுகள் தேவையானவர்கள் பெங்களூரிலிருக்கும் விதை கன்று வியாபாரிகளான, (1) நூதப்பா அண்ட் சன்ஸ் (2) ஒபலப்பாபிரதர்ஸ் (3) எம்பெயர் நர்ஸரிசீட் ஸ்டோர்ஸ், சேலம் அப்துல் ரஹிமான் சாஹிப்முதலிய வியாபாரிகளிடம் வாங்கலாம்.

4. அதிக பருமனுள்ள சுளைகளுள்ள பிலா பழச் செடிகள் நமது தோட்டத்தி லிருக்கின்றன. பழம் சிறிதாகத் தானிருக்கும். செடி 1 க்கு 100 பழங்கள் வரை கொடுக்கும் பழம் வெகு ருசியாயிருக்கும். ஆனல் பார்ப்பதற்கு பெரிய பழங்களாயிரா. இச் செடிகளும் இவ் வருஷம் அகோர வெயிலாலும், தண்ணீரில்லாததாலும் காய்க்கவில்லை. மலையாளத்திலாவது பண்ருட்டியிலாவது பட்டுக் கோட்டையிலாவது பெரிய பழங்கள் அகப்படும். நமது தோட்டத்துப் பழம்—சிறிதானபழம் தேவையானல் சரியான மழைகள் இவ்வருஷம் பெய்தால் அடுத்த வருஷம் கொடுக்கக் கூடும். ப. ர்.

அன்பார்ந்த ஐயா,

தங்கள் பத்திரிகையை நிறுத்திவிடும் உத்தேசத்துடன் விளம்பரம் செய்திருக்கிறீர்கள். விவசாயப் பத்திரிகைகள் எவ்வளவோ நான் பார்த்திருக்கிறேன். அனுபவ பூர்வமான விவசாயிக்கு தங்கள் பத்திரிகை தான் உதவி செய்யக்கூடியது என்பது எனது அபிப்பிராயம். தங்கள் பத்திரிகை நின்றுவிடின் விவசாயிகளுக்கு அது ஒரு நஷ்டமாகும். வருஷம் 1 ரூபா வாங்குவதைக்காட்டிலும் ஜீவிய சந்தா 10 ரூ. என்று விதித்து வாங்கி விட்டால் என்போன்ற அனேகருக்கு அது சவுகரியமாயிருக்கும். அம்மாதிரி விளம்பரம் செய்து கிருஷிகளை ஸ்திரமாகச் செய்ய முயற்சிப்பீர்களென்று நம்புகிறேன்.

பதில்.

வருஷ சந்தா ஒன்று உள்ள பத்திரிகாசிரியர்களெல்லாம் சாஸ்வத சந்தாவாக ரூ. 20 பெறுகிறார்கள். நாம் ரூ 10 ஆவது 20 ஆவது பெற்றுக் கொண்டு சாஸ்வதமாய் அனுப்புவதாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் மற்றப் பத்திரிகைகளைப்போல் 'கிருஷிகன்' பத்திரிகை எல்லா ஆசிரியர்களாலும் நடத்த முடியாது. எங்கள் குடும்பத்தில் எங்களுக்குப் பின்னல் நடத்தக் கூடியவர்கள் தற்காலம் இல்லையாதலால் அவ்வாறு பெற நாம் இஷ்டப்படு—

வில்லை.

ப. ர்.

சைதாப்பேட்டை பாரத்தில் வாளை திணுசு அருமையாயிருக்கிறது. கோயமுத்தூர் பாரத்தில் விசேஷ வாளையில்லை.

சைதாப்பேட்டை பாரம் வாளை திணிசு தெரிவிக்கக் கூடுமானால் பிரசுரிக்கும்படியும் திணிசுகளையும் இடந் தெரிவிக்கவும் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தஞ்சாவூர் வாளை திணிசு 1 ல் கற்பூரவாசனையும் மற்றொன்றில் சாம்பிராணி வாசனையு மிருக்கிறது. வெ. ப. திருமலையப்ப முதலியார்.

பதில்

சைதாப்பேட்டை பாரத்தில் பயிர் செய்த வாழை திணுசுகள் அநேகமாய்கோதாவரி ஜில்லாவில்சாமல் கோட்டை விவசாயப்பண்ணையில் டாக்டர் பார்பர் அவர்கள் மேல்பார்வையிலும் அண்டு கோவிலுலும் அநேக இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு பயிரிடப் பட்டன. அப்பால் அவைகள் சைதாப்பேட்டை விவசாயப் பண்ணையைக் கோயம்புத்தூருக்கு மாற்றஉத்திரவுபிறக்கு முன் சில வருஷங்கள் பயிரிடவும்பட்டன. சைதாப்பேட்டையிலிருந்து வட ஆற்காடு ஜில்லா போளூர் தாலுகா போளூரில் மா-ா-ஸ்ரீ சர்தார் ஹரி சிங்கு என்று பெயருடையவர் எல்லா திணிசுகளையும் வருத்தி பயிரிட்டுக் கொண்டிருந்தார். இப்போது எங்கு கிடைக்குமென்று நமக்கு திட்டமாய்ச் சொல்ல இடமில்லை. ஒருவேளை அங்கு சில திணுசுகளாவது கிடைக்கக்கூடும். நமக்கு ஞாபகமிருக்கும் வரை கிழ்கண்ட திணிசுகள் பயிரிடப்பட்டன.

திருநெல்வேலிஜில்லா திணுசுகள் :—கதலி, கல்கதலி, வயல்வாழை, மொந்தன், மாட்டு மொந்தன், ரஸ்தாளி, ஆனைக்கொம்பன், படத்தி, பூலாஞ்சுண்டன், சப்ரவாளை,

மலையாளம்:—நேந்திரன் கருவாளை

தஞ்சாவூர்திருச்சி:— பச்சை நாடான், சிங்கன் அல்லது ராஜாவாளை

மதுரை:—சிறுமலை

கோயம்புத்தூர்:—வாடன், தாங்கு வாடன், குரை வாழை

செங்கல்பட்டு:—கிளடி வாழை, செவ்வாழை, பேயன்,

கோதாவரி:— சக்கிரகேளி, பொந்தா, புஷ்பபொந்தா, அமிர்தபாணி, பங்காளா, கொட்டைவாழை அல்லது இலைவாழை, எல்லா ஜில்லாக்களிலும் பயிரிடப்படுகிறது.

தென்ஆர்க்காடு:— பச்சை அல்லது [illegible] வாழையில் இரண்டு ஜாதி

N. B. கல்கதலியை சில இடங்களில் [illegible] என்று சொல்லும் வழக்கமுண்டு.

கோதாவரி [illegible] மொந்தனென்று சில இடங்களில் வழங்கப்படுகிறது.

அமிர்தபாணி யென்பது கதலியென்று சில இடங்களில் சொல்வதுண்டு.
சக்கர கேழி என்று கோதாவரியில் சொல்லும் கிளிசு திருச்சியில் ராஜாவாழை யென்றும் திருநெல்வேலி முதலிய இடங்களில் சிங்கனென்றும் சொல்லுகிறார்கள். செங்கல் பட்டில் பச்சைவாழை யென்பதை சில இடங்களில் கூளி வாழை யென்றும் சொல்லுகிறார்கள்.

தஞ்சாவூரில் கற்பூரவாழை யென்பது கோதாவரியில் கற்பூர சக்கர கேழி என்று சொல்லுவதுண்டு.

ஸை யூர் சாம்பிராணி வாழை யென்பது கோதாவரியிலும் சாம்பிராணி யென்றே அழைக்கப்படுகிற

ப.ர.

ஐயா

## ஸ்ரீமான் கிருஷிகன் ஆசிரியர் அவர்கட்கு

தயவு செய்து அடியில் கண்ட விஷயங்களுக்கு ரிப்ளை கார்டில் பதில் எழுத வேண்டுகிறேன்

1 கருணைக் கிழங்குக்கு ஏற்ற நிலம், எருவு என்ன?

2. நடவேண்டிய இடைவெளி எவ்வளவு?

3. கருணைக் கிழங்கு விறை ஒரு குழிக்கு எவ்வளவு பருமன் விறை வைக்க வேண்டும்?

4. விதைக்காக கருணை கிழங்குவிதை எவ்விடத்தில் சகாயமாய்க் கிடைக்கும்?

பதில்

1. கருணைக் கிழங்குக்கு ஏற்ற நிலம் ஜாஸ்தி களிக்காலில்லாததும் இருமண் கலந்த வடிகால் வசதியுள்ள நிலமே சிலாக்கியம். சரள் சம்மந்தமான நிலங்களில் கிளங்கு திடமாய் பிடிக்கமாட்டாது. ஆகையால் மணல் சாரி நிலமே சிலாக்கியம். கிருஷிகர் இப்பயிர் செய்யும் போது முக்கியமாய் உமியை சில இடங்களில் உபயோகிப்பதுண்டு. அது மாட்டு எரு ஆட்டு எருவுடனும் சாம்பலுடனும் கலந்து உபயோகப் படுத்துவதுண்டு. அதற்கு இரண்டு காரணங்களுண்டு (1) உமி ஈரத்தை இரகித்து வேரையும் கிழங்கையும் காயாமல் வைத்துக் கொண்டிருக்குமென்றும் கிளங்கு சரியானபடிவேர் இறங்கி நன்றாய் செழிக்கக் காத்தோட்டமும் ஈரப்பதமும், பொசு பொசுப்பும் கொடுக்குமென்றும் சிலர் உமியில் சாம்பல் காரசத்து ஜாஸ்தி யிருப்பதால் அது மக்கும்போது கருணைக்கு வேண்டிய சத்து வேண்டிய தவசிய மாகையால் அது உதவுகிறதென்றும் சொல்வதுண்டு.

2. நடவேண்டிய இடை வெளி $\frac{3}{4}$ அடிமுதல் 1 அடி தூரத்துக்கு ஒரு கிழங்கு நடலாம்.

3. ஒவ்வொரு குழியிலும் முளை யுருவக்கூடிய கிழங்கா யிருந்தால் சிறு கிழங்கு நட்டால் போதும். பெரும் கிழங்காயிருந்து அதில் ஒன்றுக்கு மேல் முளை யுருவக் கூடிய பள்ளங்களும் அடையாளங்களு மிருந்தால் அதை அறுத்து வைக்கலாம். சிறு கிழங்குகள் முழுசாய் நடுவது சிலாக்கியமென்று அநுபோக சாலிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

4. இது கருணைக்கிழங்கு விசேஷமாய் பயிரிடும் வடஆற்காடு சித்தூர் ஜில்லாக்களில் கிடைக்கும். சித்தூருக்கு அருகில் முருங்கப்பட்டு கிராமத்தில் சில வருஷங்களுக்கு முன் ஜாஸ்தியாய் பயிரிட்டு சென்னைக்கு அனுப்பியிருந்தார்கள் வாலாஜாவுக்கு சமீபத்திலும் ஜாஸ்தி பயிரிட்டுக் கொண்டிருந்தார்கள், சமீபத்திலிருக்கும் விவசாய உத்தியோகஸ்தர்களைக் கேட்டால் எங்கு கிடைக்குமென்று திட்டமாய் சொல்லக்கூடும். ப. ர.

# கிருஷிகன் பஞ்சாங்கம்

பவ ஆனி மீ — சாலிவாகன 1850 கலியுகாதி. 5029, பசலி 1337-1338

கொல்லம் 1103, ஹிஜரி 1346-1347 இங்கிலீஷ் 1928 ஜூன்-ஜூலை மீ

| இங்கிலீஷ் | ஹிஜரி | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 25 | 14 | 1 | வி | ஏகா 24-29 | அஸ் 28-22 | அ28-சி | கரிநாள் நவதான்யம்விற் |
| 26 | 15 | 2 | வெ | துவா 16-34 | பர 22-26 | சி | மழை பெய்யலாம் |
| 27 | 16 | 3 | ச | 8-9<br>சது 51-51 | கிரு 16-0 | அ | விதைக்க |
| 28 | 17 | 4 | ஞா | அ ● 51-8 | ரோ 9-28 | சி | கடலைவிதைக்க |
| 29 | 18 | 5 | திங் | பிர 43-9 | மிரு 3-10<br>திரு 56-50 | அ4சி | மாலைகரும்புநட |
| 30 | 19 | 6 | செ | துதி 36-2 | புன 52-46 | சி | கரிநாள் மரம்நட |
| 1 | 20 | 7 | புத | திரி 30-9 | பூச 49-25 | சி | மிதுனம் சர்வமுகூர்த் |
| [illegible] | [illegible] | 8 | வி | சது 25-58 | ஆயி 47-44 | சி48-அ | தனியநாள் |
| 3 | 22 | 9 | வெ | பஞ 23-36 | மக 47-57 | ம48-சி | சுபம் விலக்கு |
| 4 | 23 | 10 | ச | சஷ 23-15 | பூர 50-7 | சி50 ம | தவிர்ஸ்தம்பம்நட |
| 5 | 24 | 11 | ஞா | ஸப் 24 46 | உத் 54-10 | அ | மிதுனம் விவாகம் |
| 6 | 25 | 12 | திங் | அஷ் 28-5 | அஸ் 59-49 | சி | ஷை. |
| 7 | 26 | 13 | செ | நவ 32-58 | சித் 60-0 | சி | மழை பெய்யலாம் |
| 8 | 27 | 14 | புத | தச 38-40 | சித் 6 39 | சி | வியபாரம் ஆரம்பிக்க |
| 9 | 28 | 15 | வி | ஏகா 45-8 | சுவா 14-12 | அ14-சி | கடகம் விவாஹம் |
| 10 | 29 | 16 | வெ | துவா 51-24 | விசா 21-59 | சி | கிணர் வெட்ட |
| 11 | 30 | 17 | ச | திர 57-8 | அநு 29-29 | சி | வாகனமேற |
| 12 | | 18 | ஞா | ச 60-0 | கேட் 36-17 | ம36-அ | ஞானம் ஆரம்பிக்க |
| 13 | 2 | 19 | திங் | சது 2-9 | மூல 42-8 | சி42ம | காலை 9க்குமேல் விவா |
| 14 | 3 | 20 | செ | ○ 6-0 | பூரா 46-55 | சி47-ம | தனியநாள் |
| 15 | 4 | 21 | புத | பிர 8-47 | உத் 50-32 | அ51-சி | காலை 7க்குள் விவாஹ |
| 16 | 5 | 22 | வி | துவி 10-22 | திரு 53-2 | சி | காலை 6க்குள் விவாகம் |
| 17 | 6 | 23 | வெ | திரி 10-49 | அவி 54-25 | சி | கடலை விதைக்க |
| 18 | 7 | 24 | ச | சது 10-5 | சத 54-45 | அ55-ம | மேற்கு பிரயாணம் |
| 19 | 8 | 25 | ஞா | பஞ் 8 21 | பூரட் 54-4 | சி54-அ | கவலை எத்தம் போட |
| 20 | 9 | 26 | திங் | சஷ் 5-33 | உத் 52-23 | சி | சிம்மம் நாமகரணம் |
| 21 | 10 | 27 | செ | சப் 1-47<br>அஷ் 57-3 | ரேவ 49-50 | சி | தெற்கு பிரயாணம் |
| 22 | 11 | 28 | புத | நவ 51-39 | அசு 46-25 | ம46-சி | பூஷணம் விற்க |
| 23 | 12 | 29 | வி | தச 45-28 | பர 42-16 | சி42-ம | மழை பெய்யலாம் |
| 24 | 13 | 30 | வெ | ஏகா 38-42 | கிரு 37-32 | சி38-ம | சுரங்கம் வெட்ட |
| 25 | 14 | 31 | ச | துவா 31-33 | ரோ 32-24 | அ32-சி | தோட்ட மாரம்பிக்க |
| 26 | 15 | 32 | ஞா | திர 24-13 | மிரு 27-8 | சி | தக்ஷணாயன புண்யகா |

# ஜெயரங்கன்

## J. R. ரங்கராஜா

அவர்களால் எழுதப்படும் புது நாவல் அச்சிலிருக்கிறது கூடிய ஜல்தியில் வெளிவரும்

---

தமிழ்ப் பேராசிரியன்

மாகறல்—கார்த்திகேய முதலியார்

அவர்கள் இயற்றிய

## மொழிநூல

இந்நூல் பண்டைத்தமிழ் நூலாராய்ச்சி செய்வோருக்கும் சரித்திர ஆராய்ச்சிக்காரருக்கும் பெரும்பயன் தருவது. தமிழில் இதுகாறும் எவராலும் இயற்றப்படாத அரிய பெரிய புது நூல். தமிழின் கண்ணுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் தெளிவாய் உற்பத்தி முதலியன எடுத்துக் கூறுவது. தமிழேயன்றி மற்றைப் பாஷைகளிலு முள்ள சொற்களின் உற்பத்தி முதலியவற்றைத் தெரிந்து கொள்வதற்கும் சாதனமாயுள்ளது.

உயர்ந்த கலை பளபளப்பான கடிதத்தில் அச்சிடப் பட்டிருக்கிறது. தமிழறிந்த ஒவ்வொருவர் கையிலும் அவசியமாக யிருக்க வேண்டியது. இதன் விலை காலிகோ கட்டடம் ரூ. 2

மா-மா- இராமசுவாமி முதலியார்

பழந்தமிழ்ப் புத்தகசாலை.

கிண்டி, சைதாப்பேட்டை போஸ்டு,

சென்னை.

---

## கம்மபாலன்.

### தமிழ் மாதப் பதிப்பு

தென்னாட்டில் கம்ம ஜாதியப் பத்திரிக்கை இஃதொன்றே. கிராமவாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு. வருட சந்தா ரூ. 1 தான்.

ஐக்கிய சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தக பாரங்கள் எம்மிடம் கிடைக்கும்.

R. வெங்கடசாமி நாயுடு,

பத்திராதிபர் கம்மபாலன்

திருத்தங்கல்.

## The Journal of the Madras Agicultural Students' Union.

A monfhly Journal in English devoted to the Study of Improved Agriculture. - Articles of Scientific and general interest are published along with Extracts & reviews from various Journals both Indian & foreign Subscription per annum Rs Four. Single copy as Six.

Apply to Manager M. A. S. U Journal
AGRICULTURAL COLLEGE, LAWLEY ROAD P O. *Coimbatore*

---

ஸ்ரீமதி வை மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

## சண்பகவிஜயம்

இந்த நாவல் "இது சிறந்த நாவல்" படிப்பதில் ஆர்வ முடையோர் புகழத்தக்கபடி நாவலுக்குரிய இலக்ஷணங்களுடன் அமைந்திருக்கிறது. இதனைப் படிக்கத்தொடங்கினால் முடிக்காமல் புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது.

இது பாலவிநோதினிப் பத்திராசிரியராகிய வரகவி. திரு. அ சுப்பிரமண்ய பாரதியார் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச் சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும் நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம குணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேகமேற்கோள்களுடன் விளக்க வைத்திருக்கிறபடியால், இந்த நாவல், கேவலம் நாவல் வகையில் எண்ணிய புறக்கணிக்கத்தக்கதல்ல; போற்றத்தக்கதேயாம்.

ஜெகன் மோகினி ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

---

## வியவசாய புத்தகங்கள்

| | ரூ அ பை |
|---|---|
| விவசாய விளக்கம் | 1—4—0 |
| நெல் | 1—0—0 |
| கரும்பு | 1—0—0 |
| மா | 0—7—0 |

தபால் சார்ஜ் வி. பி. முதலியன பிரத்தியேகம்

ஜி. இராஜகோபால் நாயுடு
பென்ஷன் விவசாய இன்ஸ்பெக்டர்


---


Printed and Published by J. R. Ranga Raju at the Raju Press' "Jagannatha Baugh" Saidapet, Madras.